பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

06 07 2025 **SUNDAY** 6 45 **AM**

தலைப்புச் செய்திகள்

1. அர்ஜென்டினா அதிபருடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் ஆக்கபூர்வமாக அமைந்ததாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. பிரிக்ஸ் உச்சி மாநாடு பிரேஸிலின் ரியோடி ஜெனிரோவில் இன்று தொடங்குகிறது.

3. மருத்துவக் கட்டமைப்பு மற்றும் மருத்துவ சேவைகளில் உலகின் மையமாக இந்தியா உருவெடுத்து வருவதாக மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா கூறியுள்ளார்.

4. போக்குவரத்து சேவையை மேம்படுத்தும் வகையில், 11 ஆயிரம் பேருந்துகளை கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில அமைச்சர் திரு. சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

5. இங்கிலாந்துக்கு எதிரான 19 வயதுக்குட்பட்டோருக்கான நான்காவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், இந்தியா 55 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

>>>>>><<<<<<

அர்ஜென்டினா அதிபருடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் ஆக்கபூர்வமாக அமைந்ததாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவிட்டுள்ள அவர், இருநாடுகளுக்கும் இடையேயான தூதரக உறவுகள் ஏற்பட்டு 75 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில், இருதரப்பு உறவுகள் மேலும் வலுவடையும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

விவசாயம், பாதுகாப்பு, எரிசக்தி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருநாடுகளும் இணைந்து செயல்படுவது குறித்து விவாதித்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மருந்து உற்பத்தி மற்றும் விளையாட்டுத் துறையில் ஏராளமான வாய்ப்புகள் உள்ளதாக பிரதமர் தெரிவித்துள்ளார். இந்த சந்திப்பின் போது அந்நாட்டு அதிபர், திரு. **Javier Milei**-ஐ இந்தியா வருமாறு அப்போது அவர் அழைப்பு விடுத்தார். தனது அர்ஜென்டினா பயணத்தை முடித்துக் கொண்டு பிரதமர் திரு. நரேந்திர மோடி, பிரேஸில் சென்றடைந்தார். முன்னதாக, அர்ஜென்டினா தலைநகர் **Buenos Aires**-ல் உள்ள தேசப்பிதா மகாத்மா காந்தி மற்றும் ரவீந்திரநாத் தாகூர் நினைவிடங்களில் அவர் மரியாதை செலுத்தினார். இதனையடுத்து, சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், மகாத்மா காந்தியின் தொலைநோக்குப் பார்வை மற்றும் யோசனைகள் எப்போதும் மனித குலத்திற்கு வழிகாட்டியாக திகழ்வதாக குறிப்பிட்டுள்ளார்.

மகாத்மா காந்தியின் சிந்தனைகள், லட்சக்கணக்கான மக்களுக்கு மனவலிமையையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

ரவீந்திர தாகூர் 1924ஆம் ஆண்டு அர்ஜென்டினாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டதை நினைவுகூர்ந்துள்ள பிரதமர், நாட்டு மக்களின் மனங்களில், குறிப்பாக – மாணவர்கள் மற்றும் அறிஞர்கள் மனதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். நாட்டிற்காக தாகூர் ஆற்றிய அர்ப்பணிப்பு மிக்க பங்களிப்பிற்காக நாடு பெருமிதம் கொள்வதாக அவர் தெரிவித்துள்ளார். கல்வி கற்க வேண்டியதன் அவசியத்தை தாகூர் தொடர்ந்து வலியுறுத்தி வந்ததையும் பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

>>>>>><<<<<<

பிரிக்ஸ் உச்சி மாநாடு பிரேஸிலில் இன்று தொடங்குகிறது. ரியோடி ஜெனிரோவில் நடைபெறும் இம்மாநாடு, இரண்டு நாட்கள் நடைபெறவுள்ளது. இம்மாநாட்டில் பங்கேற்பதற்காக பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று காலை ரியோடி ஜெனிரோ சென்றடைந்தார். இந்த மாநாட்டில் வளரும் நாடுகளின் முன்னேற்றத்திற்கான வாய்ப்புகள் குறித்து விரிவாக விவாதிக்கப்படவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார். சுகாதாரம், சர்வதேச விவகாரங்களுக்கு தீர்வு காணும் வகையில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் பயன்பாடு, பருவநிலை மாற்றங்களை எதிர்கொள்வதற்கான நிதிசார் நடவடிக்கைகள் குறித்தும் இம்மாநாட்டில் விவாதிக்கப்படவுள்ளது.

வளர்ச்சியை உள்ளடக்கிய டிஜிட்டல் பொருளாதாரம் குறித்து இந்தியா தனது அனுபவத்தை உறுப்பு நாடுகளிடையே பகிர்ந்து கொள்ளும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார். எல்லை தாண்டிய பயங்கரவாத செயல்களுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு பிரிக்ஸ் உறுப்பு நாடுகள் கண்டனத்தை பதிவு செய்யும் என்று எதிர்பார்க்கப்படுவதாக அவர் மேலும் கூறுகிறார்.

>>>>>><<<<<<

மருத்துவக் கட்டமைப்பு மற்றும் மருத்துவ சேவைகளில் உலகின் மையமாக இந்தியா உருவெடுத்து வருவதாக மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா தெரிவித்துள்ளார். புதுதில்லியில் நடைபெற்ற இந்திய மருந்து உற்பத்தி நிறுவனங்கள் கூட்டமைப்பின் சர்வதேச மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், மருத்துவ சேவைகள் தரமானதாகவும், அனைவருக்கும் எளிதில் கிடைக்கக்கூடிய வகையிலும், குறைந்த செலவிலும் இருக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். உள்நாடு மற்றும் வெளிநாடுகளின் மருத்துவ தேவையை பூர்த்தி செய்யும் வகையில், புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் ஆராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார். மருத்துவ துறையில்

வளர்ச்சியடைந்த நாடுகள் பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வரும் நிலையில், நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் புதிய கண்டுபிடிப்புகள் மூலம் இந்திய மருத்துவர்கள் உலக அளவில் தங்களது பங்களிப்பை அதிகரிக்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

புதிய சிகிச்சை முறைகள், முன்கூட்டியே நோய் கண்டறியும் முறைகள் போன்ற அனைத்துவிதமான மருத்துவ பராமரிப்பு சேவைகளை மேம்படுத்தும் வகையில் ஆராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் திரு. ஓம் பிர்லா வலியுறுத்தினார்.

>>>>>><<<<<<

பல்லுயிர் பெருக்கத்திற்கு பாதிப்பு ஏற்படாமல் இயற்கை சூழலை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொண்டு வருவதாக மாநில வனத்துறை அமைச்சர் திரு. ராஜ கண்ணப்பன் தெரிவித்துள்ளார். ராமநாதபுரம் மாவட்டத்தில் வனத்துறை சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை ஆய்வு செய்த பின், செய்தியாளர்களிடம் பேசிய அவர், குந்துக்கால் கடற்கரையில் இருந்து குருசடி தீவுக்கு வனத்துறை சார்பில் படகு சேவை இயக்கப்பட்டு வருவதாக கூறினார். முன்னதாக, சுற்றுலா படகுகளின் பராமரிப்பு குறித்து வனத்துறை அதிகாரிகளிடம் அமைச்சர் கேட்டறிந்தார்.

>>>>>><<<<<<

தமிழகத்தில் போக்குவரத்து சேவையை மேம்படுத்தும் வகையில், 11 ஆயிரம் பேருந்துகளை கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

கோவையில் 100 புதிய அரசு பேருந்துகளின் சேவையை அவர் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இம்மாவட்டத்தில் பேருந்து போக்குவரத்து சேவையை அதிகரிக்கும் வகையில் கூடுதலாக 252 பேருந்துகளை இயக்க திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

கோவை மற்றும் மதுரை மாநகரங்களுக்கு மின்சார பேருந்துகள் சேவை விரைவில் தொடங்கப்படும் என்று அவர் கூறினார். இதற்கென 500 மின்சார பேருந்துகளை கொள்முதல் செய்வதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார். ஏழைகள் மற்றும் சிறு குறு தொழில் நிறுவனங்கள் பாதிக்கப்படாத வகையில் மின்கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளதாக திரு. சிவசங்கர் கூறினார்.

>>>>>><<<<<<

கர்நாடகாவின் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதை அடுத்து, மேட்டூர் அணை இரண்டாவது முறையாக அதன் முழுக்கொள்ளளவை எட்டியுள்ளது.

நீர்வரத்து அதிகரித்துள்ள நிலையில், உபரி நீர் வெளியேற்றப்படும் என்பதால், கரையோரம் வசிக்கும் மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் வார விடுமுறையை ஒட்டி சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது. இதமான தட்பவெப்ப நிலை நிலவுவதால் சுற்றுலாப் பயணிகள் பல்வேறு இடங்களை கண்டு ரசித்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

இருவரிச் செய்திகள்

நேபாளத்தில் திரு. கே.பி. சர்மா ஒலி அரசுக்கு அளித்து வரும் ஆதரவை விலக்கிக் கொள்வதென **Nagarik Ulmukti** கட்சி முடிவு செய்துள்ளது.

>>>>>><<<<<<

உத்ராகண்டில் அரசின் திட்டங்களை தவறாக பயன்படுத்துவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில முதலமைச்சர் திரு. புஷ்கர்சிங் தாமி தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

அமர்நாத் பனி லிங்கத்தை இதுவரை 20 ஆயிரத்திற்கும் அதிகமான யாத்ரிகர்கள் தரிசனம் செய்துள்ளனர்.

>>>>>><<<<<<

தெலங்கானா மாநில பிஜேபி தலைவராக திரு. என். ராமச்சந்திர ராவ் பொறுப்பேற்றுக் கொண்டார்.

>>>>>><<<<<<

சமூக நடைமுறைகளுக்கு உகந்த வகையில் சட்ட விதிகள் இருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு. **B.R. Gavai** வலியுறுத்தியுள்ளார்.

>>>>>><<<<<<

பீகாரில் புதிய வாக்காளர்களை சேர்க்கும் பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் அருகேயுள்ள பூந்தண்டலம் ஊராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சிப் பணிகளை ஆட்சியர் திருமதி. கலைச்செல்வி மோகன் ஆய்வு செய்தார்.

>>>>>><<<<<<

நாமக்கல் மாவட்டத்தில் நடைபெற்ற தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் தேர்வான 600-க்கும் மேற்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணைகளை ஆட்சியர் திருமதி. துர்கா மூர்த்தி வழங்கினார்.

>>>>>><<<<<<

விவசாயிகளின் உரிமைக்காக போராடி உயிர் நீத்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி விழுப்புரம், நாமக்கல், மயிலாடுதுறை மாவட்டங்களில் நடைபெற்றது.

>>>>>><<<<<<

திருவள்ளூர் மாவட்டம், திருநின்றவூரில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு கூட்டம் காவல் ஆய்வாளர் திரு. ராஜேஷ் தலைமையில் நடைபெற்றது.

>>>>>><<<<<<

விளையாட்டுச் செய்திகள்

இங்கிலாந்துக்கு எதிரான 19 வயதுக்குட்பட்டோருக்கான நான்காவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், இந்தியா 55 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

**Worcester-**ல் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 363 ரன் எடுத்தது.

364 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய இங்கிலாந்து, 45 புள்ளி 3 ஓவரில் 308 ரன் மட்டுமே எடுத்து தோல்வியடைந்தது.

**>>>>>><<<<<<**

சர்வதேச தடகள போட்டியின் ஈட்டி எறிதல் பிரிவில் இந்தியாவின் நீரஜ் சோப்ரா தங்கப்பதக்கம் வென்றார்.

**>>>>>>END<<<<<<**